**வகுப்பு : 12**

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2025 - 26

நேரம் : 3.00 மணி] **தமிழ்** [மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி – I

குறிப்பு **அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 14X1=14

**ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.**

1. "மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்குதற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமைநலம் என்பது

   1. பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது 2. பொதிகையில் தோன்றியது

   3. வள்ளல்களைத் தந்தது

   அ) 1 மட்டும் சரி ஆ) 1, 2 இரண்டும் சரி இ) 3 மட்டும் சரி ஈ) 1, 3 இரண்டும் சரி

2. மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய சொல்லாய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு

   அ) மத்த விலாசம் ஆ) தமிழ்நாட்டு வரலாறு இ) அஞ்சிறைத்தும்பி ஈ) திசை எட்டும்

3. பேச்சுத் தமிழில் அமைந்த தொடரைத் தெரிவு செய்க.

   அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும் ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது

   இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன

4. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே

   அஃறிணை என்மனார் அவரல பிறவே" – இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல் ----------

   அ) நன்னூல் ஆ) அகத்தியம் இ) தொல்காப்பியம் ஈ)இலக்கண விளக்கம்

5. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| அ) குரங்குகள் | 1. | கன்றுகளைத் தவிர்த்தன |
| ஆ) விலங்குகள் | 2. | மரங்களிலிருந்து வீழ்ந்தன |
| இ) பறவைகள் | 3. | குளிரால் நடுங்கின |
| ஈ) பசுக்கள் | 4. | மேய்ச்சலை மறந்தன |

   அ) 1, 3, 4, 2 ஆ) 3, 4, 2, 1 இ) 3, 2, 1, 4 ஈ) 2, 1, 3, 4

6. கூற்று இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்.

   **காரணம் :** கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணி சார்ந்ததாகவே இருந்தது.

   அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி

   இ) கூற்று தவறு காரணம் தவறு ஈ) கூற்று சரி காரணம் சரி

7. வையகமும் வானகமும் ஆற்றலரிது – எதற்கு?

   அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன் தூக்கார் செய்த உதவி

   இ) திணைத்துணை நன்றி ஈ) காலத்தினால் செய்த நன்றி

8. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.

   அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்

   ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்

   இ) நிறுத்தற்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்

   ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல

9. “குடும்பம்” என்னும் சொல் முதன் முதலில் இடம்பெற்றுள்ள நூல் ----------

அ) தொல்காப்பியம் ஆ) திருக்குறள் இ) குறுந்தொகை ஈ) புறநானூறு

10. “இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக” என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது

அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ)இவை அனைத்தும்

11. “எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே” – என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுவது

அ) தனிக்குடும்ப முறை ஆ) விரிந்த குடும்ப முறை

இ) தாய்வழிச் சமூக முறை ஈ) தந்தைவழிச் சமூகமுறை

12. “மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே” – இப்பாடலடி இடம் பெற்றுள்ள சங்க இலக்கிய நூல் ------

அ) குறுந்தொகை ஆ) புறநானூறு இ) பதிற்றுப்பத்து ஈ) ஐங்குறுநூறு

13. “கம்பரின் காலம்”

அ) 9 ஆம் நூற்றாண்டு ஆ) 12 ஆம் நூற்றாண்டு

இ) 14 ஆம் நூற்றாண்டு ஈ) 2 ஆம் நூற்றாண்டு

14. “வள்ளுவனைப் பெற்றதால்
பெற்றதே புகழ் வையகமே” – எனப் பாடியவர்

அ) பாரதியார் ஆ) திரு.வி கலியாணசுந்தரனார்

இ) பாரதிதாசன் ஈ) இராமலிங்க அடிகளார்

## பகுதி – II (பிரிவு–1)

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x2=6

15. அணியிலக்கணத்தையும் கூறும் இலக்கண நூல்கள் யாவை?

16. “நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது” விளக்குக.

17. மறக்கக் கூடாது, மறக்கக் கூடியது எவற்றை?

18. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?

## பிரிவு–2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x2=4

19. “விரிபெரு தமிழர் மேன்மை
ஓங்கிடச் செய்வ தொன்றே
உயிர்ப்பணியாக் கொண்டோன்” யார், யாரைப் பற்றி எதற்காகக் கூறுகிறார்?

20. இந்தோ – சாரசனிக் கட்டடக்கலை – குறிப்பு வரைக.

21. புக்கில், தன்மனை – சிறுகுறிப்பு எழுதுக.

## பிரிவு–3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7x2=14

22. திருவளர்ச்செல்வன், திருவளர்செல்வன் – இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

23. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.

அ) மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்.

ஆ) காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.

24. கலைச்சொல் தருக.

அ) Matriarchy ஆ) Epigraphy

25. ஏதேனும் ஒன்றனுக்கு இலக்கணக்குறிப்புத் தருக.

அ) இலாத ஆ) புதுப்பெயல்

26. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

அ) அருங்கானம் ஆ) ஆங்கவற்றுள்

27.ஏதே ம் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

ஆ) வியந்து ஆ) தந்தனன்

28.மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

தலை, தளை, தழை

29.குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடி.

அ) தமிழறிஞர்; முதலிரு எழுத்துக்களால் மறைக்கலாம்.

ஆ) சிறுகதை ஆசிரியர், முதல் பாதி நவீனம்.

*(தமிழ் ஒளி, புதுமைப்பித்தன், அம்பை, மறைமலை அடிகள்)*

30.கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.

திரை, காண், கைதட்டல், மக்கள்.

பகுதி – III (பிரிவு–1)

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x4=8

31. “செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்” தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.

32.வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

33.குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டுக.

34.சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.

பிரிவு–2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8

35.மயிலை சீனி. வேங்கடசாமி வரலாற்று ஆய்வுகள் பற்றிய விளககுக.

36.சென்னை ன் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத் இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

37.தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?

38.தமிழர் பரம்பரை – விளக்குக.

பிரிவு–3

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக 3x4=12

39. அ) பொருள் வேற்றுமை அணி– விளக்குக.

(அல்லது)

ஆ) “அன்பும் அறனும் உடை த்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது” – இக்குற ் பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40.இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

*பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி*
*பிறமொழிக்குச் சிறப்பெடுத்த பிழையை நீக்க*
*ஊற்றெடுத்த அன்புரையால் உலுங்க வைத்திவ்*
*உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?*
*கற்றுணர்ந்தே அதன் இனிமை காண்பாய் என்று*
*கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்*
*தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட*
*தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம்.*

– நாமக்கல் கவிஞர்

... தருக.

1. **Learning is a treasure that will follow its owner everywhere.**
2. **A new language is a new life.**
3. **Knowledge of languages is the doorway to wisdom**
4. **The limits of my language are the limits of my world**

(அல்லது)

**காது கேளாதவர்களுக்கான மாற்று வினா;**

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

இன்றைய வாழ்க்கைச் சூழலில் ஓய்வின்மை, காலம் தவறிய உணவுப் பழக்க வழக்க மாற்றம் உள்ளிட்டவையே பல்வேறு உடல்நலப் பாதிப்புகளுக்கு மூல காரணமாகின்றன. மருத்துவம் சார்ந்த தேவைகளுக்கென்று குறிப்பிட்ட தொகையை ஒதுக்கும் அளவிற்கு உடல்நிலையைக் கவனத்தில் கொள்ளாமல், ஓர் இயந்திர வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உணவே மருந்து மருந்தே உணவு என்று வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். ஒருவர் உட்கொள்ளும் உணவில் புரதம், கொழுப்பு, மாச்சத்து கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துக்கள் சேர்ந்ததே சமச்சீர் உணவு. எனவே, அளவறிந்து உண்ண வேண்டியது அவசியமாகும்.

**வினாக்கள்:**

அ) உடல்நலப் பாதிப்புகளுக்கு மூல காரணமானவை எவை?

ஆ) எப்படிப்பட்ட வாழ்க்கையை நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்?

இ) நம் முன்னோர்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள்? ஈ) சமச்சீர் உணவு என்றால் என்ன?

42. அ) வாகைத்திணையை விளக்குக. (அல்லது)

ஆ) கூதிர்பாசறைத்துறை – விளக்குக.

43. **கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.**

அ) முன்

ஆ) கொண்டு

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **3x6=18**

44. அ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

(அல்லது)

ஆ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

45. அ) புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்து கிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி உங்கள் ஊர் மின்வாரிய பொறியாளருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது – எவ்வாறு? விளக்குக.

46. அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

(அல்லது)

ஆ) “உரிமைத்தாகம்” கதையில் வெளிப்படும் உறவின் மேன்மையைப் புலப்படுத்துக.

## பகுதி – V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** **4+2=6**

47. அ) “துன்பு உளது” எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) “சினம்” என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.